# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**03.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. பெரியார் அண்ணா விருதுகள் அறிவிப்பு

- **பெரியார் விருது:**
  - கோபி தொகுதி முன்னாள் எம்.பி **பி.ஏ.சாமிநாதனின் மனைவி சம்பூரணத்துக்கு** பெரியார் விருது வழங்கப்படுகிறது.
- **அண்ணா விருது:**
  - கோவை தொகுதி முன்னாள் எம்.பி **இரா.மோகனுக்கு** அண்ணா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
  - இந்தி எதிர்ப்பு போராட்ட காலத்திலும் மிசா சட்டத்தின் கீழ் சிறை சென்றார்.
- **கலைஞர் விருது:**
  - திமுக நாடாளுமன்ற குழு தலைவரும் கட்சியின் பொருளாளருமான **டி.ஆர்.பாலுவுக்கு** கலைஞர் விருது அளிக்கப்படுகிறது.
  - இந்தி எதிர்ப்பு போராட்டம் அவசரநிலை காலம் என பல்வேறு தருணங்களில் சிறை சென்றவர்.
- **பாவேந்தர் விருது:**
  - புதுச்சேரியைச் சேர்ந்த **சி.பி.திருநாவுக்கரசுக்கு** பாவேந்தர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- **பேராசிரியர் விருது:**
  - விருதுநகர் மாவட்டம் குன்னூர் கிராமத்தைச் சேர்ந்த, **குன்னூர் சீனிவாசன்** பேராசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### 2. குற்றமும் கருணையும்

- நாம் எப்படி பணிபுரிய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக குற்றமும் கருணையும் நூல் விளங்குகிறது என்று உயர்நீதிமன்ற நீதிபதி **ஜி.ஆர்.சுவாமிநாதன்** தெரிவித்தார்.
- காவல்துறை முன்னால் இயக்குனரான அனூப் ஜெய்ஸ்வாலின் காவல் பணி அனுபவங்கள் குறித்து ஊடகவியலாளர் வி.சுதர்சன் எழுதிய **'இளம் ஐபிஎஸ் அதிகாரியின் தூத்துக்குடி அனுபவங்கள்'** ஆங்கில நூலின் தமிழாக்கமான 'குற்றமும் கருணையும்' நூல் வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றது.

### 3. பாடகர் பம்பா பாக்கியா காலமானார்

- பிரபல பின்னணி **பாடகர் பம்பா பாக்யா** மாரடைப்பு காரணமாக சென்னையில் நள்ளிரவு காலமானார்.
- பம்பா பாக்யா ஏ.ஆர்.ரகுமான் இசையில் ராவணன் படத்தில் பாடகர் ஆக அறிமுகமானார்.

## மத்திய செய்திகள்

### 1. விக்ராந்த் போர்க்கப்பல் அர்ப்பணிப்பு

- உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர் நரேந்திர மோடி இந்தியர்களுக்கான நவீன எதிர்காலம் உதயமாகியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.
- விமானம் தாங்கி போர்க்கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திட்டத்தை கடந்த **2007 ஆம் ஆண்டு** மத்திய அரசு செயல்படுத்தியது.
- இத்திட்டத்தின் கீழ் முதல் விமானம் தாங்கி போர்க் கப்பலான விக்ராந்த் சுமார்

ரூபாய் 20,000 கோடி மதிப்பில் கட்டப்பட்டது.

- கொச்சி கப்பல் கட்டுமான நிறுவனம் அந்த கப்பல் கட்டும் பணியை 2009 ஆம் ஆண்டு தொடங்கியது.
- போர்க்கப்பலில் பயன்படுத்தப்பட்ட ஸ்டீல் முதல் பல்வேறு பொருள்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை.
- கப்பலை கட்டமைத்ததில் கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தின் பொறியாளர்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) விஞ்ஞானிகள் கடற்படை என பல்வேறு தரப்பினரின் பங்களிப்பு காணப்படுகிறது.
- சிறப்பம்சங்கள்
  - நீளம் 262.5 மீட்டர்
  - அகலம் 62.5 மீட்டர்
  - உயரம் 59 மீட்டர்
  - எடை சுமார் 43,000 டன்
  - டர்பைன்களின் எண்ணிக்கை 4
  - எஞ்சின் திறன் 88 மெகாவாட்
  - அதிகபட்ச வேகம் மணிக்கு 28 கடல் மைல் (சுமார் 52 கிலோமீட்டர்)
  - ஒருமுறை எரிபொருள் நிரப்பினால் செல்லும் தொலைவு சுமார் 7,500 கடல் மைல்
  - இயக்க வல்ல போர் விமானங்கள் மிக்-29கே காமோவ்-31 உள்ளிட்டவை.
  - இயக்க வல்ல ஹெலிகாப்டர்கள் எம்ஹெச்-60 ஆர் இலகுரக ஹெலிகாப்டர்கள் உள்ளிட்டவை.
  - நிறுத்தக்கூடிய போர் விமானங்கள் 30
  - அறைகளின் எண்ணிக்கை சுமார் 2300
  - அடுக்குமாடிகள் 18

## 2. சர்வதேச பெருங்குடல் அறுவை சிகிச்சை மாநாடு தொடக்கம்

- சர்வதேச பெருங்குடல் அறுவை சிகிச்சை மாநாடு சென்னையில் தொடங்கியது.
- நூற்றுக்கும் மேற்பட்ட சர்வதேச மருத்துவ வல்லுநர்கள் பங்கேற்று சமகால மருத்துவ தொழில்நுட்பம் சிகிச்சை முறைகள் பரிசோதனை மற்றும் மருத்துவ நடவடிக்கைகள் குறித்து விரிவாக கலந்துரையாட உள்ளனர்.

## 3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தெலுங்கானாவுக்கு கடந்த எட்டு ஆண்டுகளில் ரூபாய் 20000 கோடி கிடைக்க பெற்றுள்ளது.
- இந்த காலகட்டத்தில் நாடு முழுவதும் மத்திய அரசு ரூபாய் 5 லட்சம் கோடி செலவிட்டுள்ளது.

## 4. இந்திய கடற்படையின் கொடி மாற்றியமைப்பு

- இந்திய கடற்படையின் பழைய கொடி மாற்றப்பட்டு புதிய கொடி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- ஆங்கிலேயர் ஆட்சி காலத்து சின்னங்களுக்கு பதிலாக புதிய வடிவத்தை கொடி தாங்கியுள்ளது.

- **சத்ரபதி சிவாஜி** மன்னரால் கற்பனை செய்யப்பட்டபடி கடலில் இந்திய கடற்படையின் புதிய கொடி பறக்கும் என்று தெரிவித்தார் பிரதமர் நரேந்திர மோடி.
- இந்திய கடற்படையின் பழைய கொடியில் இடம்பெற்றிருந்த குறுக்கும் நடுக்கமான சிவப்பு கோடுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன.
- அந்த கோடுகள் **செயின்ட் ஜார்ஜ் மன்னரின் சிலுவையை குறிக்கும்** வகையில் இருந்து வந்தன.
- தற்போது ஆட்சி அமைக்கப்பட்டுள்ள புதிய கொடியில் மராட்டிய மன்னரான சிவாஜியின் முத்திரை இடம்பெற்றுள்ளது.
- அதன் ஓரத்தில் **இரண்டு தங்க நிற கோடுகள்** இடம்பெற்றுள்ளன.
- புதிய கொடியில் தேசிய சின்னமான சிங்கங்கள் ஒரு நங்கூரத்தின் மீது இடம்பெற்றுள்ளன.
- அதன் கீழே **'சம் நோ வருண'** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.
- கொடியில் உள்ள சின்னத்தை சுற்றியுள்ள எட்டு முனைகள் இந்திய கடற்படையின் பல்வேறு திசைகளில் செயல்படும் திறனை குறிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கிழக்கு இந்திய கம்பெனி தனது செயல்பாடுகளை சூரத்தில் 1612 ஆம் ஆண்டு தொடங்கியது.
- 1707-ல் கடற்படையின் கொடியில் செயின்ட் ஜார்ஜ் மன்னரின் சிலுவைக்கு பதிலாக பிரிட்டிஷ் அரசின் தேசியக்கொடி இடம் பெற்றது.
- 1801ல் அதில் பிரிட்டிஷ் தேசியக் கொடியில் சிறிது மாற்றம் செய்யப்பட்டு சிவப்பு கோடுகள் இடம்பெற்றன.
- 1830-ல் பம்பாய் கடற்படையின் பெயர் இந்திய கடற்படை என்று மாற்றி அமைக்கப்பட்டது.
- மீண்டும் 1863 முதல் 1877 வரை அதன் பெயர் பம்பாய் கடற்படை என்று சூட்டப்பட்டிருந்தது.
- கடற்படையின் பல்வேறு சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் அதன் பெயர் **'ராயல் இந்தியன் மரைன்'** என்று 1892ல் மாற்றப்பட்டது.
- அப்போது கடற்படை வசம் 50 கப்பல்கள் இருந்தன.
- கடந்த 1934 ராயல் இந்தியன் மரைன் என்ற பெயர் **'ராயல் இந்தியன் நேவி'** என்று மாற்றப்பட்டது.
- முன்னதாக 1879ல் கடற்படைக்கு நீல நிறக் கொடி அறிமுகம் செய்யப்பட்டது.
- அது 1928 வரை அமலில் இருந்தது.
- 1947 இல் நடைபெற்ற பிரிவினையை தொடர்ந்து 'ராயல் இந்தியன் நேவி' என்றும் 'ராயல் பாகிஸ்தான் நேவி' என்றும் பிரிக்கப்பட்டது.
- இந்தியா 1950 ஜனவரி 26 குடியரசானதை தொடர்ந்து ராயல் என்ற வார்த்தை கைவிடப்பட்டு **'இந்திய கடற்படை'** என்று பெயரிடப்பட்டது.
- 1950 ஜனவரி 26 முதல் 2001 வரை பிரிட்டிஷ் கடற்படையின் மாற்றியமைக்கப்பட்ட கொடியையே இந்திய கடற்படை பெற்றிருந்தது.
- 2001 ஆகஸ்ட் 15 முதல் இந்திய கொடிக்கு பதிலாக வெள்ளைக்கொடி அறிமுகம் செய்யப்பட்டது.
- அது 2004 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

### 5. மாசடைந்த காற்றை சுவாசிக்கும் 99 சதவீதம்

- இந்தியர்கள் நாட்டில் காற்று மாசுபாடு குறித்த ஆய்வே **'கிரீன் பீஸ் இந்தியா'** என்ற அமைப்பு நடத்தியது.
- காற்றில் 2.5 மைக்ரான் விட்டமுள்ள நுண்துகள்கள் பி.எம் 2.5 அதிக அளவில் கலந்துள்ளன உலக சுகாதார அமைப்பு அனுமதிக்கும் ஆண்டு சராசரி அளவைவிட **ஐந்து மடங்குக்கும் அதிகமான** நுண் துகள்கள் காற்றில்

கலந்துள்ளன.

- அத்தகைய மாசடைந்த காற்றைத் தான் நாட்டில் உள்ள 99 சதவீதத்திற்கும் அதிகமானோர் சுவாசித்து வருகின்றனர்.
- பி.எம் 2.5 மாசு அதிகமாக காணப்படும் இடமாக தில்லி உள்ளது.
- பி.எம் 2.5 நுன்துகள்களை சுவாசிப்பதால் அவை நுரையீரல் சுவாச பாதை உள்ளிட்ட பகுதிகளை ஊடுருவி சென்று சுவாசக் கோளாறுகள், இதயம் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்த அதிக வாய்ப்பு உள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

### 6. மேற்குவங்கம் முதலிடம்

- நாட்டில் கடந்த ஆண்டு சமூக வலைத்தளங்களில் பொய்ச் செய்திகள் பரப்பியதாக அதிக வழக்குகள் பதிவான மாநிலங்களில் **மேற்குவங்கம் முதலிடத்தில்** உள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் தெரியவந்துள்ளது.
- **மேற்கு வங்கத்தில்** மொத்தம் **43 வழக்குகள்** பதிவாகியுள்ளன.
- இதில் **28 வழக்குகள் கொல்கத்தாவில்** மட்டும் பதிவாகியுள்ளன.
- மக்களிடம் சென்றடைவதற்காக ஒழுக்கமற்ற பொய் பிரச்சாரங்களை அரசியல் கட்சிகள் மேற்கொண்டதே மேற்குவங்கத்தில் பொய் செய்திகள் அதிகம் பரவியதற்கு காரணம்.
- மேற்கு வங்கத்தை தொடர்ந்து **தெலுங்கானாவில் 34 வழக்குகளும்**, **உத்தர பிரதேசத்தில் 24 வழக்குகளும்** அதிகபட்சமாக பதிவாகியுள்ளன.
- நாடு முழுவதும் பதிவான 129 வழக்குகளில் மேற்கு வங்கத்தில் மட்டும் **24 சதவீத வழக்குகள்** உள்ளன.

### 7. ஏஜஎ.்ப்எ.்ப் தலைவர்

- இந்திய கால்பந்து சம்மேளனத்தின் (ஏஜஎ.்ப்எ.்ப்) புதிய தலைவராக **கல்யாண் சௌபே** தேர்வு செய்யப்பட்டார்.
- இந்திய கால்பந்தின் **85 ஆண்டுகால வரலாற்றில்** முன்னாள் வீரர் ஒருவர் சம்மேளனத் தலைவராக இருப்பது இதுவே முதல் முறை.
- தலைவர் தேர்தலுக்கான போட்டியில் கல்யாண் சௌபே 33-1 என்ற வாக்குகள் கணக்கில் முன்னாள் நட்சத்திர வீரரான **பாய்ச்சங் பூட்டியாவை** தோற்கடித்தார்.